# <u>ஊ.சே.நி. அங்கத்தவர்களை மீளப்பதிவு செய்யும் செயல்திட்டம்</u>

தொழில் திணைக்களத்திலும், மத்திய வங்கியிலும் மற்றும் தொழில் தருநர்களிடமும் காணப்படும் ஊ.சே.நிதி அங்கத்தவர்களின் தகவல்களில் காணப்படும் வேறுபாடுகளை தவிர்க்கும் நோக்கத்துடன் ஒரு பொதுவான தகவல்களஞ்சிய முறைமை ஒன்றினை உருவாக்குவதற்கு இலங்கை மத்திய வங்கி மற்றும் தொழில் நிணைக்களமும் இணைந்து ஊ.சே.நிதி அங்கத்தவர்களை மீளப்பதிவு செய்வதற்கான கருத்திட்டம் ஒன்றினை உருவாக்கியுள்ளது. மேலும் தொழில் தருநர்கள் தொடர்பான சில தகவல்களும் சேகரிக்கப்படும்.

- 2.1 மில்லியன் அங்கத்தவர்களின் பங்களிப்புப்பனம் 57,000 தொழில்தருநர்களிடமிருந்து நடைமுறையில் பெறப்படுகின்றது.
- 9.2 மில்லியன் நடைமுறையில் பங்களிப்புச் செய்யப்படாத அங்கத்தவர்களின் கணக்குகளை பேனுகின்றது. (மாதாந்தம் பங்களிப்பு பணம் பெற்றுக் கொள்ளப்படாதவை).
- நடைமுறையில் பங்களிப்புச்செய்யும் அங்கத்தவர்களின் அனேகமான செயல்படாத கணக்குகள் அங்கத்தவர்களின் முந்திய தொழில்கள் தொடர்பானவை என நம்பப்படுகின்றது.

**ஊ.சே. நிதியத்தில் மீளப்பதிவு செய்தல் என்றால் என்ன ?**

- அங்கத்தவர்கள் எதிர்நோக்குகின்ற சிரமங்களையும் கஷட்ங்களையும் தவிர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் ஊ.சே.நி. அங்கத்தவர்களை அவர்களின் தே.அ.அட்டையில் உள்ள பெயரின் படி பதிவு செய்து அவர்களுக்கான அங்கத்துவ இலக்கமாக தே.அ.அட்டையின் இலக்கம் வழங்கப்படும்.
- பின்னர் ஊழியர்களின் தே.அ.அட்டை இலக்கமானது ஊழியர்களின் அங்கத்துவ இலக்கமாகக் கருதப்படும்.
- அங்கத்தவர்களின் முந்திய கணக்குகள் (முந்திய தொழில்கள்) புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கணக்குடன் ஒன்றிணைக்கப்படும்.
- அதாவது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை அங்கத்துவ இலக்கமாகக் கொண்ட கணக்குடன் ஒன்றிக்கப்படும்.
- அங்கத்தவர்களின் கைவிரல் அடையாளம் <u>இலத்திரணியில் முறைமையில்</u> பெரப்பட்டு அது அங்கத்தவர் கணக்குடன் தொடர்பு படுத்தப்படும்.

## மீளப்பதிவு செய்துகொள்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் எவை ?

**தொழிலாளர்களுக்கு,**

- காலத்துக்குக்காலம் தொழிலை மாற்றிக் கொண்டாலும் ஒய்வூதிய நன்மையை பெற்றுக்கொள்ளும் வரைக்கும் தனியான ஒரு கணக்கு இலக்கம் இருப்பதற்கான/உறுதி.
- விரைவாகவும் பிழைகள் எதுவும் ஏற்படாமலும் அங்கத்தவர்களின் பங்களிப்புக்களை அவளின் / அவனின் கணக்குகளில் செலவு வைக்கப்படுவதற்கான உறுதி.
- குருகிய காலத்தில் முழுமையான ஒய்வூதிய நன்மைகளை பெற்றுக்கொள்ளல்.
- தொழில் மாற்றங்களை மேற்கொள்ளும் போது தண்ணிச்சையாக் அங்கத்தவர்களின் முந்திய கணக்குகள் ஒன்றிணைக்கப் படுதல்.

- முந்திய தொழிலின் பங்களிப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தை மேற்கொள்ளத்தவரும் சந்தர்ப்பத்தில் ஏற்படக்கூடிய நிதி நட்டங்களின் அபாயத்தை நீக்குதல்.
- தொழில் தருநரினால் தவறுதலாக குறித்த நபரின் அங்கத்துவ இலக்கத்தை பல அங்கத்தவர்களுக்கு ஒதுக்குவதனால் ஏற்படக்கூடிய தேவையற்ற பிரச்சினைகளை தடுத்தல்.
- மோசடிசெய்யும் நோக்கத்தில் உரிமை அற்றவர்களினால் மேற்கொள்ளப்படும் மீளப்பெரல் கோரிக்கையை தடுத்தல்.
- அங்கத்தவர் உரிமையினை உறுதிப்படுத்துவதற்கு மேலதிக ஆவணங்களை சமர்ப்பிக்காமல் ஊ.சே.நி. பங்களிப்பு மீளப்பெரல் பத்திரத்தை ஒப்படைக்க முடியுமாதல்.
- தே.அ. அட்டை இலக்கத்தை ஞாபகம் வைத்துக்கொள்வதன் மூலம் மேலதிகமான கணக்கு இலக்கங்களை ஞாபகம் வைத்துக்கொள்ளக்கூடிய தேவை ஏற்படாமை.
- இத்திட்டத்தின் மூலம் அங்கத்தவர்களின் கணக்கு மீதிகளை வங்கி முறைமையின் தண்ணியக்க "டெலர்" அட்டைகளை உபயோகிப்பதன் மூலமோ அல்லது அங்கத்தவர்களின் கையடக்க தொலைபேசி மூலமோ அல்லது இணையத்தை உபயோகிப்பதன் மூலமோ அறிந்துகொள்வதற்கு வசதியழித்தல்.
- வருடாந்த கணக்கு விபரம் அடங்கிய கூற்று ஒன்றினை நடைமுறையில் பங்களிப்புச் செய்யாத ஒவ்வொரு அங்கத்தவர்களும் பெற்றுக் கொள்ளல்.

**தொழில் தருநருக்கு**

- அங்கத்தவர் பெயர் அல்லது அங்கத்தவர் கணக்குகளின் உறுதிப்படுத்தல் கடிதங்கள் முழுமையாக நீக்குதல்.
- தமது தொழிலாளர் அங்கத்தவர்கள் தொடர்பான பதிவுகளை பிழையின்றி சீராக வைத்துக்கொள்ள முடிதல்.
- குறித்த ஒரு தொழிலின் அங்கத்துவ இலக்கத்தினை ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய நிதி நட்டங்களை நீக்குதல்.
- மாதாந்த பங்களிப்புக்களை விணைத்திறனாகவும் விளைதிறனாகவும் அனுப்புவதற்கு புதிய தரவுகளஞ்சிய முறைமையை இலத்திரணியில் முறைமையுடன் இணைத்தல்.

**இக்கருத்திட்டத்தின் வெற்றிக்கு அங்கத்தவர்களின் பொருப்புக்கள்.**

இக்கருத்திட்டத்தின் வெற்றியானது தொழிலாளர்களினாலும் தொழில் தருநர்களினாலும் குறித்த நேரத்தில் வழங்கப்படும் சரியான தகவல்களிலே முழுமையாக தங்கியுள்ளது. தொழிலானளர்களின் தகவல்கள் இணைக்கப்பட்டுள்ள "C" வகை தொழில்தருநர்கள் (150 தொழிலாளர்களுக்கு குறைவான தொழில்) பின்வரும் பத்திரத்தில் சேகரித்தல்.

RR1 - தே.அ. அட்டையிண் படி தொழிலாளர்கள் தகவல்கள்.

150 ற்கு கூடுதலான தொழிலாளர்களை கொண்ட நிறுவானங்களின் தொழிலாளர் மற்றும் தொழில்தருநர் தொடர்பான தகவல்கள் CDs மூலம் சேகரிக்கப்படும். (150 ட்கு கூடுதலான தொழிலார்களின் பங்களிப்பு தொகை C3 எனும் பத்திரத்தின் மூலம் தொழில் தருநரினால் அனுப்பப்படுகின்றது.

RR2 - விருப்பத்துடன் செய்யப்படும் தற்போதைய தொழிலின் அங்கத்தவர் பெயர் மாற்றம். அவசியம் ஏற்படின் மட்டும்.

RR3 - முந்திய தொழில்களின் எண்ணிக்கை மற்றும் முந்திய கணக்குகளை புதிய கணக்கு இலக்கத்துடன் ஒன்றிணைக்க விரும்பினால்.

**<u>தொழில்தருநர்கள் தொடர்பான தகவல்கல் RR4 பத்திரம் மூலம் சேகரிக்கப்படும்.</u>**

தொழில் அதிகாரி அல்லது அவரின் அதிகாரம் பெற்ற அதிகாரியினால் தகவல் சேகரிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

இக்கருத்திட்டம் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படும்.

**கட்டம் ஒன்று -** நடைமுறையில் பங்களிப்புச் செய்யும் அங்கத்தவர்களின் தகவல் சேகரிப்பு.

1. 2007 செப்தம்பரில் தகவல் சேகரிப்பு இடம்பெறும்.
2. நடைமுறையில் பங்களிப்புச்செய்யும் அங்கத்தவர்களினதும் தெழில்தருநர்களினதும் தே.அ.அட்டை மற்றும் வேறு தேவையான தரவுகள் தொடர்பான தகவல்கள் போன்றன தொழில் அதிகாரியினால் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற ஒரு அதிகாரினால் குறித்த வேலைத்தளத்திற்கு சென்று சேகரிக்கப்படும்.

**கட்டம் இரண்டு - கைவிரல் அடையாளம்**

தொழில் அதிகாரியினால் தொழிலாளர்களின் கைவிரல் அடையாளம் இலத்திரணியல் அடிப்பிடையில் சேகரிக்கப்படும்.

தொழில் அதிகாரியினால் அனைத்து நடைமுறையில் செயல்படும் தொழிலாளர்களினதும் கைவிரல் அடையாளம் இலத்திரணியல் அடிப்படையில் பெரப்பட்டு பின்னர் அங்கத்தவர் கணக்குடன் சரியான நேரத்தில் தொடர்பு படுத்தப் படும்.

**கட்டம் மூன்று -** நடைமுறையில் பங்களிப்புச் செய்யாத ஊ.சே.நிதி அங்கத்தவர்களின் தகவல் சேகரிப்பு

இச்செயற்படுகளை 2008 ஐனுவரி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கிறோம்.

இதுசம்பத்தமான மேலதிக தகவல்கள் உரியசந்தர்ப்பங்களில் ஊடகங்களில் வழங்கப்படும்.

நாங்கல் வழியுறுத்துகின்றோம் உங்களிடம் தேசிய அடையாள அட்டைஇல்லாவிட்டால்/ கடவுச்சீட்டு, அல்லது அடையாளததை உறுதிப்படுத்தச் கூடிய வேறுசரியான ஆவணங்களை சமர்ப்பித்து உறுதிப்படுத்துவதன்மூலம் பூரண ஒத்துழைப்பைத் தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.